# Verified RealEstate™

Your trusted partner for buying, selling, and managing property, ensuring hassle-free service with 100% transparency.


3/350/2 Mettukuppam,
OMR Thoraipakkam,
Chennai, India

hello@verified.realestate

+91 9996 12 9996


**Official Property Record**

Digitally Verified Record - Powered by Verified RealEstate™



## நகர் ஊரமைப்புத்துறை
## நகர் ஊரமைப்பு துணை இயக்குநர் (பொ), மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம், திருப்பூர் மாவட்டம் அவர்களின் செயல்முறை ஆணை
## பிறப்பிப்பவர் : திரு. பா. ரமேஷ்குமார், பி.இ.,எம்.பி.ஏ.,

ந.க.எண்.**1753/2020/**திமா  நாள். 18 .01.2021.

**பொருள் :** குடியிருப்பு மனைப்பிரிவு - நகர் ஊரமைப்புத்துறை - மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம் - திருப்பூர் மாவட்டம் - உடுமலைப்பேட்டை வட்டம் உடுமலைப்பேட்டை ஊராட்சி ஒன்றியம் - சின்னவீரம்பட்டி ஊராட்சி மற்றும் கிராமம் - க.ச.எண்கள்.367/2A3C,367/2A3D,367/2A3A2-ல் **1.76 ஏக்கர்** பரப்பளவுள்ள இடத்தில் உத்தேச குடியிருப்பு மனைப்பிரிவிற்கான தொழில் நுட்ப ஒப்புதல் வழங்குதல் - குறித்து.

**பார்வை :**
1. இணையதள விண்ணப்பம் எண்.201900601013617 நாள் 10.08.2019
2. தலைவர் ஊராட்சி, சின்னவீரம்பட்டி ஊராட்சி கடிதம் நாள் இல்லை.
3. மனுதாரர் திரு. K. குமார் என்பவரது விண்ணப்பம் நாள் இல்லை மற்றும் இணைப்புகள் (இவ்வலுவலகத்தில் பெறப்பட்ட நாள். 22.06.2019)
4. அரசாணை எண்.71, ஊரக வளர்ச்சி துறை, நாள் 16.06.2003
5. அரசாணை எண்.18, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் ந.நி-(I) துறை, நாள்.04.02.2019 மற்றும் அரசாணை எண்.16, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் ந.நி-(I) துறை, நாள்.31.01.2020.
6. அரசாணைஎண்.79 வீட்டுவசதி மற்றும் நகர்புற வளர்ச்சி நவ4(3)த்துறை, நாள்.4.05.2017.
7. நகர் ஊரமைப்பு ஆணையர், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண்.13753/2018 எல்ஏ2, நாள்.16.08.2018.
8. நகர் ஊரமைப்பு ஆணையர், சென்னை அவர்களது சுற்றறிக்கை, ந.க.எண். 13686/2017/எல்ஏ-2, நாள். 08.09.2017.
9. நகர் ஊரமைப்பு ஆணையர், சென்னை அவர்களது கடிதம், ந.க.எண். 12201/2017/சிபி, நாள். 28.09.2017.
10. தலைவர், சின்னவீரம்பட்டி ஊராட்சி அவர்கள் கடிதம் ந.க.எண்.03/2020 நாள். 07.11.2020 (சாலை பகுதிகள் மற்றும் பொதுஉபயோகம் ஒப்படைப்பு செய்யப்பட்டமைக்கான தானப்பத்திர ஆவண எண்.7554/2020 நாள்.24.09.2020).
11. தான பத்திர ஆவண எண்.8789/2020, நாள்.22.10.2020. (TANGEDCO-ற்கு ஒப்படைக்கப்பட்டது).
12. பூங்கா பரப்பிற்கு ஈடான வழிகாட்டி மதிப்பு தொகை செலுத்திய நாள் 18.07.2020.
13. மனுதாரர் நன்னிலை வரி செலுத்திய நாள்.07.01.2021.

*****

**உத்தரவு :**

மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம், திருப்பூர் மாவட்டம், உடுமலைப்பேட்டை வட்டம், உடுமலைப்பேட்டை ஊராட்சி ஒன்றியம், சின்னவீரம்பட்டி ஊராட்சி மற்றும் கிராமம், க.ச.எண்கள்.367/2A3C, 367/2A3D, 367/2A3A2-ல் **1.76 ஏக்கர்** பரப்பளவுள்ள இடத்தில்

வரைபடத்திற்கு **ம.வ/ந.ஊ(தி.மா)எண்.15/2021** அமையும் உத்தேச குடியிருப்பு மனைப்பிரிவு வரைபடத்திற்கு ம.வ/ந.ஊ(தி.மா)எண்.15/2021 என எண்ணிடப்பட்டு, தொழில்நுட்ப அனுமதி கீழ்க்கண்ட சிறப்பு நிபந்தனைகள் மற்றும் இத்துடன் இணைக்கப்பட்டுள்ள மனைப்பிரிவு நிபந்தனைகளின்படி திட்ட அனுமதியும் வழங்கப்படுகிறது.

மேற்படி, உத்தேச மனைப்பிரிவிற்கு பார்வை 5 ல் காண் அரசாணை மற்றும் ஊராட்சி கட்டிட விதிகள் மற்றும் வழிமுறைகளை பின்பற்றி, **தலைவர், சின்னவீரம்பட்டி ஊராட்சி** அவர்களிடம் இருந்து மனுதாரர் மனைப்பிரிவிற்கு இறுதி ஒப்புதல் பெற்றுக்கொள்ள வேண்டும்.

**சிறப்பு நிபந்தனைகள் :-**

1) நகர் ஊரமைப்புத் துறை சட்டப்பூர்வமாக தொழில்நுட்ப அனுமதி முன்இசைவு அளிப்பதன் மூலம் விண்ணப்பதாரரின் பேரில் உள்ள நில உரிமையை உறுதிப்படுத்தவில்லை. தொழில் நுட்ப முன்இசைவு அளிப்பதற்கு முன்பு விண்ணப்பதாரரின் விண்ணப்பத்துடன் சமர்ப்பித்த ஆவணங்களில் (கிரையப்பத்திரம், குத்தகை பத்திரம், பட்டா, தானப்பத்திரம் பொது அதிகார பத்திரம் மேலும் பல) விண்ணப்பதாரர் வளர்ச்சி செய்ய உரிமையுள்ளதா என்று மட்டுமே சரிபார்க்கப்படுகிறது. அதன்மூலம் முதற்கட்டமாக விண்ணப்பதாரருக்கு வளர்ச்சி செய்ய உரிமை உள்ளதா என்று பார்க்கப்படுகிறது.

2) சொத்தினை வாங்க விரும்பும் எந்த நபரும், விண்ணப்பதாரருக்கு சொத்தின் மீது உள்ள உரிமையை தனியாக உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும். மேலும் அதன்மேல் வேறு யாரேனும் தனி நபர் உரிமை கோரினால் அவர்கள் அதனை பொருத்தமான தகுதியுள்ள நீதிமன்றத்தின் முன் தீர்த்துக்கொள்ளலாம். இதனை முடிவு செய்ய நகர் ஊரமைப்புத் துறை பொருத்தமான அமைப்பு அல்ல.

3) பார்வை 7-ல் சுட்டியுள்ள நகர் ஊரமைப்பு ஆணையர், சென்னை அவர்கள் சுற்றறிக்கையின்படி, "உள்ளாட்சிக்கு தானமாக ஒப்படைக்கப்பட்ட சாலைப்பகுதிகளை மனுதாரர் சொந்த செலவில் வருவாய் உட்பிரிவு செய்து, அதற்கான விபரங்கள் பெறப்பட்ட பின்னரே, உள்ளாட்சியால் மனைப்பிரிவிற்கு இறுதி ஒப்புதல் வழங்கப்பட வேண்டும்".

4) பார்வை 8-ல் சுட்டியுள்ள நகர் ஊரமைப்பு ஆணையர், சென்னை அவர்கள் சுற்றறிக்கையின்படி, "The Tamil Nadu Government in G.O. Ms. No: 112, Housing and Urban Development Department, Dated: 22.06.2017 have approved the Tamilnadu Real Estate ( Regulation & Development) Act 2016. The promoter has to advertise, Market, book, sell or offer for sale, or invite persons to purchase in any manner any plot, apartment or building, as the case may be in any Real Estate project or part of it only after registering the real estate Project with the Real Estate Regulatory Authority".

5) புன்செய் விவசாய பகுதியிலிருந்து குடியிருப்பு மனைப்பிரிவாக அபிவிருத்தி மாற்ற நில உபயோக மாற்ற பயன்பாட்டிற்கு அரசாணை எண்.79 வீட்டுவசதி மற்றும் வளர்ச்சித்துறை நாள்.04.05.2017-ன் விதி-3ன்படி ரூ.1000/- பரிசீலனைக் கட்டணம், உள்ளாட்சியில் பெற்றும் விதி-9ன்படி 3% மனைப்பிரிவு மொத்த இடத்தின் விற்பனை மதிப்பில் (Market Value)-ல் கீழ்கண்ட அரசுக் கணக்குத் தலைப்பில் மனைப்பிரிவு விண்ணப்பதாரரிடமிருந்து பெற்று உள்ளாட்சியால் செலுத்தப்படவேண்டும். செலுத்திய விவரம் இவ்வலுவலகத்திற்கும் தெரிவிக்கப்படவேண்டும்.

கணக்குத் தலைப்பு

0217 Urban Development
60 Other Urban Development schemes
800 Other Receipts.
AS Receipts under Land use conversion charges
27 Non Taxation fees – 09 collections
(DPC: 0217-60-800-AS-2790)

நிலப்பயன்மாற்றத்தொகை அரசுக்கு செலுத்திய பின்னரே நிலப்பயன்மாற்றமும் தொழில்நுட்ப முன் இசைவும் அமுலுக்கு வரும், அதன்பின்பே உள்ளாட்சி மனைப்பிரிவிற்கு இறுதி ஒப்புதல் அளிக்கப்படவேண்டும்.

6) தமிழ்நாடு ஒருங்கிணைந்த வளர்ச்சி மற்றும் கட்டிட விதிகள் - 2019 விதி எண்.47(11)-ன்படி, மனைப்பிரிவில் தேவைப்படும் சாலை, குடிநீர் வசதி, வடிகால் வசதி, கழிவுநீர் வசதி மற்றும் மின்சார வசதிகளை ஏற்படுத்துதல்/ மேம்படுத்தலுக்காக உள்ளாட்சி மற்றும் தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகத்தால் மதிப்பீடு செய்யப்படும் செலவுத்தொகையினை மனுதாரரிடமிருந்து பெற்றுக் கொள்ளப்பட வேண்டும்.

மேற்படி சிறப்பு நிபந்தனைகளுடன் தொழில் நுட்ப அனுமதி வழங்கப்பட்ட மனைப்பிரிவு வரைபடம் மற்றும் மனைப்பிரிவு நிபந்தனைகள் இத்துடன் இணைத்து அனுப்பி வைக்கப்படுகிறது.

நகர் ஊரமைப்பு துணை இயக்குநர்(பொ),
மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம்,
திருப்பூர் மாவட்டம்.

**இணைப்பு** :
அங்கீகரிக்கப்பட்ட மனைப்பிரிவு வரைபடங்கள் -2
மனைப்பிரிவு நிபந்தனைகள் -2

**பெறுநர்**

1. தலைவர்,
சின்னவீரம்பட்டி ஊராட்சி,
உடுமலைப்பேட்டை வட்டம்,
திருப்பூர் மாவட்டம்.

**நகல்**

மனுதாரர்
2) திரு. K. குமார், த/பெ.கருப்புசாமி,
16, யசோதா ராமலிங்கம் லேஅவுட்,
காந்தி நகர் அஞ்சல்,
உடுமலைப்பேட்டை, திருப்பூர்.

3) The Chairman,
TamilNadu Real Estate Regulatory Authority,
No 1 A, CMDA Tower II, 1st Floor,
Gandhi Irwin Bridge Road, Egmore,
Chennai - 600008.

## சின்னவீரம்பட்டி ஊராட்சி மன்றத் தலைவர் அவர்களின் நடவடிக்கைகள்

## முன்னிலை: திருமதி.ப.கலாவதிபழனிச்சாமி அவர்கள்

ந.க.எண்.04/2021

நாள்: 04.03.2021

பொருள்: மனைப்பிரிவு நகர் ஊரமைப்பு துறை - திருப்பூர் மாவட்டம் - உடுமலைப்பேட்டை வட்டாரம் - சின்னவீரம்பட்டி ஊராட்சி - க.ச.எண். 367/2A3C, 367/2A3D, 367/2A3A2-ல் 1.76 ஏக்கர் பரப்பளவில் அமையும் உத்தேச குடியிருப்பு மனைப்பிரிவிற்கான தொழில்நுட்ப ஒப்புதல் வழங்கியது - ஊராட்சியில் மனைப்பிரிவிற்கு ஒப்புதல் வழங்குதல் - சார்பு

பார்வை:
1. நகர ஊரமைப்பு துறை இயக்குநர் திருப்பூர் அவர்களின் ந.க.எண்.1753/2020/திமா/ நாள்: 18.01.2021
2. சின்னவீரம்பட்டி ஊராட்சி தீர்மான எண்.07/2021 நாள்: 18.02.2021

பார்வை 1-ல் காண் கடித்தின்படி திருப்பூர் மாவட்டம், உடுமலைப்பேட்டை வட்டம், சின்னவீரம்பட்டி ஊராட்சி, சின்னவீரம்பட்டி கிராமம் க.ச.எண். 367/2A3C, 367/2A3D, 367/2A3A2-ல் 1.76 ஏக்கர் பரப்பளவில் அமையும் உத்தேச குடியிருப்பு மனைப்பிரிவிற்கு நிபந்தனையின் அடிப்படையில் தொழில்நுட்ப ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.

மேற்படி மனைப்பிரிவில் சின்னவீரம்பட்டி ஊராட்சிக்கு பூங்கா மற்றும் சாலை அமைக்க சின்னவீரம்பட்டி ஊராட்சி மன்ற தலைவர் பெயரில் கிரைய ஆவண எண். 7554/2020 நாள்: 24.9.2020-ன்படி தானக்கிரையம் வழங்கப்பட்டுள்ளது. நகர ஊரமைப்பு துறை இயக்குநர் திருப்பூர் அவர்களின் ந.க.எண். 1753/2020/திமா/ நாள்: 18.01.2021-ன்படி நிபந்தனைக்குட்பட்டு தொழில்நுட்ப வரைபடத்திற்கு பார்வை 2-ல் காண் சின்னவீரம்பட்டி ஊராட்சி தீர்மான அங்கீகாரத்தின்படி ஊராட்சியின் ஒப்புதல் வழங்கி இதன்வழி உத்தரவிடப்படுகிறது.

P. Kalavathy.

தலைவர் / செயல் அலுவலர்
சின்னவீரம்பட்டி ஊராட்சி
உடுமலைப்பேட்டை
4/3/2021

இணைப்பு:
மனைப்பிரிவு நிபந்தனைகள்

நகல்:

1.திரு.K.குமார் த/பெ கருப்புச்சாமி
யசோதாராமலிங்கம் லே அவுட்
காந்திநகர் அஞ்சல்
உடுமலைப்பேட்டை

2. நகர ஊரமைப்பு துறை இயக்குநர்,திருப்பூர் மண்டலம்

70

## நிபந்தனைகள்

1. திருப்பூர் நகர ஊரமைப்பு துறை இயக்குநர் அவர்களின் ம.வ/ந.ஊ(திம) எண்.15/2021 எண்ணிட்ட வரைபடத்தின்படி எல்லை கற்கள் பராமரிக்கப்பட வேண்டும்.

2. மனைப்பிரிவு உரிமையாளர் சின்னவீரம்பட்டி ஊராட்சிக்கு அரசாணை எண்.79 வீட்டுவசதி மற்றும் நகர்புற வளர்ச்சித் துறை நாள்: 04.05.2007-ன் படி விதி 3-ன்படி பரிசீலனை கட்டணம் ரூ.1000/- மும் வளர்ச்சிக் கட்டணம் சென்ட்டிற்கு ரூ.400/- வீதம் 110 சென்டிற்கு ரூ.44000/-(ரூபாய் நாற்பத்தி நான்காயிரம் மட்டும்) ஊராட்சி பொதுநிதியில் செலுத்தப்பட வேண்டும்.

3. திருப்பூர் நகர ஊரமைப்பு துறை இயக்குநர் அவர்களின் ம.வ/ந.ஊ(திம) எண்.15/2021 எண்ணிட்ட வரைபடத்தின்படி ஒப்புதல் அளிக்கப்பட்ட மனைப்பிரிவு ஒப்புதலையும் எவ்வித மாற்றம்/ விடுதலின்றி மனைப்பிரிவு நுழைவாயிலில் 6X4 அளவிலான நிரந்த தகவல் பலகை மூலம் பொது மக்களின் பார்வைக்கு நிரந்தரமாக வைக்கப்பட வேண்டும்.

4. மனுதாரர் சின்னவீரம்பட்டி ஊராட்சி மன்றத் தலைவர் அவர்களிடமிருந்து மனைப்பிரிவு வரைபடத்திற்கு மனைப்பிரிவு அங்கீகரித்த மன்றத் தீர்மான எண்ணும், நாளும் மனுதாரருக்கு ஒப்பந்தமான நாளும், எண்ணும் தெளிவாக குறிப்பிட்டு அறிவிப்பு செய்யப்பட வேண்டும்.

P. Kalavathy.

தலைவர் / செயல் அலுவலர்
சின்னவீரம்பட்டி ஊராட்சி
உடுமலைப்பேட்டை

fm
4/3/2021



## our services doesn't just end there

### Buying & Selling Services

Property Buying Assistance, Property Selling Support, Market Price Analysis, Owner Outreach and Negotiation.

### Legal & Documentation Services

Certified EC, Patta, legal opinions, property verification, due diligence, litigation solutions, and legal heir certificates.

### Property Development & Approvals

Building plan approvals, construction, layout and sub-division approvals, zone conversion, and occupancy certification.

### NRI & Investment Services

Escrow Services, Rentals, Litigation Solutions, Property Valuation and Property Management

### Compliance & Special Services

Demolition, Vaasthu checks, regularization of unauthorized buildings, and office space solutions.



# empowering your real estate decisions with smart tools

## Property Valuation & Cost Estimation

Guideline Value, Apartment Composite Value, Stamp Duty & Registration Fees Calculator, Building Value Calculator, Capital Gains Calculator, Area Unit Converter, Length Unit Converter

## Ownership, Compliance & Legal Verification

Encumbrance Certificate (EC) Search, Find Your SRO, Temple Property Check, WAQF Property Check, View Patta/Chitta, View FMB, Patta Analyzer, EC Analyzer

## Zoning & Land Use Analysis

Land Use Zone Finder, CRZ Zone Check, Aquifer Zone Check, CBA Check, EWS Check, Road Width Check, Proposed Road Widening Check, FSI Calculator

## Property Documentation & Workflow Tools

Forms & Templates, Document Generator, Document Translation, Dictionary

## Vastu & Property Management Tools

Home Vastu Shastra, Plot Vastu Shastra, Property Management

Verified RealEstate™

We're honored to be part of your real estate journey

3/350/2 Mettukuppam,
OMR Thoraipakkam,
Chennai, India

hello@verified.realestate
+91 9996 12 9996
www.verified.realestate